DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.284/2025

**prosecution witness: PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நல்லசாமி | தொழில்/ பதவி | : | சார்பு ஆய்வாளர், நகர் காவல் நிலையம், இராமேஸ்வரம். |
| த/பெ. | : | சுந்தர்ராசு | வயது | : | 56 |
| ஊர் | : | இராமேஸ்வரம் | சமயம் | : | இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>07.07.2026</u>

(1ம் எதிரி ஆஜர், 2 வது எதிரி மனுவின் பெயரில் ஆஜர் இல்லை, எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

**<u>முதல் விசாரணை:-</u>**

1.நான் தற்சமயம் சார்பு ஆய்வாளராக நகர் காவல்நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். மேற்படி வழக்கில் தரப்பினர்களான எதிரியும் நிகழ்நிலை புகார்தாரும் நீதிமன்றத்திற்கு வெளியே தங்களுக்குள் பேசி சமாதானமாகிவிட்டதாலும் அதன் அடிப்படையில் அ.சா.1 பிறழ்சாட்சியமளித்துள்ளபடியால் வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு.சத்தீஸ்குமார் என்பவர் பணி மாறுதலாகவும் சென்றுவிட்டபடியால், ஆவணங்களின் அடிப்படையில் இந்த வழக்கில் நான் கூடுதல் சாட்சியாக சாட்சியமளிக்க அனுமதி வேண்டி அனுமதியின் பெயரில் சாட்சியமளிக்கிறேன்.

2. கடந்த 18.08.2022-ம் தேதி 11.30 மணிக்கு இராமேஸ்வரம் நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர் திரு.சதீஸ்குமார் நிலையப் பொறுப்பில் இருந்தபோது 16.08.2022 ம் தேதி இராமேஸ்வரம் காந்தி நகரை சேர்ந்த ராமமூர்த்தி மகன் முனியசாமி கொடுத்த புகாரை பெற்று சி.எஸ்.ஆர்.248/2022 விசாரணை செய்து அதன் தன்மைக்கேற்றவாறு நிலையக் குற்ற எண்.221/2022 பிரிவுகள்.448, 294(b), 323, 324, 379(NH) இதச கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார்.

3. புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து இராமேஸ்வரம் நீதித்துறை நடுவருக்கு சமர்ப்பித்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** புகார் மனு, முதல் தகவல் அறிக்கை அசல்களை இராமேஸ்வரம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும், பிற நகல்களை சம்பந்தப்பட்ட உயர்அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தும், இவ்வழக்கை சார்பு ஆய்வாளர் சதீஸ்குமார் விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளார்.

4. கடந்த 18.08.2022–ம் தேதி 12.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பன்னீர் செல்வம் மற்றும் கருணை ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்துள்ளார் (**பார்வை மகஜர் அ.சா.ஆ.4** ஆகவும், **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5. பின்பு சாட்சிகள் முனியசாமி, சேதுநம்பு, கோட்டைஈஸ்வரி, மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பெற்றுள்ளார்.

6. அதன்பின்பு வழக்கின் எதிரிகள் இருவரும் இராமநாதபுரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் கைது செய்யப்படவில்லை. காயம்பட்ட நபருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திருமதி.பசித் தஸ்லிமா அவர்களை விசாரணை செய்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு பெற்றுள்ளார். (**அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

7.இறுதியாக தனது விசாரணையை முடித்து எதிரிகளின் மீது ஏற்கனவே முதல் தகவல் அறிக்கையில் பதியப்பட்ட பிரிவுகளான 448, 294(b), 323, 324, 379(NH) இதசவில் இருந்து பிரிவுகள்.448, 294(b), 323, 324 இதசவாக சட்டப்பிரிவுகளை மாற்றி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து 01.09.2022ல் தாக்கல் செய்துள்ளார். (**சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

1. வழக்கின் சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிடாமல் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. வழக்கிற்கும், ஆஜர் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கினை சரியாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரிதான்.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.07 10:12:00 +0530